முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் அதிபத்த நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

10.11.2018, சனிக்கிழமை

1. **ஆனந்த ஞான மகா சூட்சுமமே**
**ஆறுமுகனாரின் கலியுக தவமே**
**ஞானதேசிகனாக வந்து இனிதே**
**ஞானசபை அமைத்து அருளும் ஞானியே**

2. ஞானியே உன் பெருமை கூறி
ஞாலமதில் ஒளி சூட்சும நூலை
இனிமைபட **விளம்பி துலை திங்கள்**
**இயம்பிட அறுநான்கு திகதி காரி வாரம்**
**(விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 24ம் நாள் 10.11.2018, சனிக்கிழமை)**

3. வாரமதில் **அதிபத்த நாயனாரும்**
வழங்கிடுவேன் உலகோர் நலமுற
சோரம் போகா யுகம் படைக்க
சைவநெறியே வழிகாட்டல் என

4. என மக்களிடை சாத்வீகம்
இயல்பாக பரவி நற்குணம்பட
ஞான விதையிடும் அரங்கனே
ஞானிகளை வணங்கும் பூசை

5. பூசைமுறை வழங்கி முழுமதிதோறும்
புண்ணியமுடன் பூசை வளர்க்கும்
வாசி வென்ற தவசியே தேசிகனே
வள்ளலே உன் மார்க்கமே உலகில்

6. உலகினில் சிறந்த சன்மார்க்கம்
உயர்வாய் ஏற்கும் மக்களெல்லாம்
வளமுடன் ஞானபலம் பெற்று
வாழும் காலமே காரிய வெற்றிகள்

7. வெற்றிகளுடன் தரும சிந்தை
வினவிட பரவி பலவகையும்
ஆற்றல் கூடி சிறந்திடுவர்
அரங்கனே கலியுக மீட்பின் குரு

8. குருவருள் கண்டு வரும் மக்கள்
குருவருள் தொடர்ந்து வரும் மக்கள்
திருவருள் துணை பெற்றுமே
தேற்றமுடன் பிறவா கதி பெறுவர்

9. பெருமைமிகு அரங்கன் தருமம்
பிசகில்லா ஞானவழிகாட்டும் தருமம்
ஆறுமுகன் ஆளுமை சிறப்பை
அகிலமெங்கும் கொண்டு வரும் தருமம்

10. தருமம் வளர வளர கலியுகம்
தானே அழிவினின்று மீண்டு
ஆறுமுகனார் அருள் பலமுடன்
அழியாமை வரம் அருளும்

11. அருளும் ஞானயுகமாகும்
ஆளுமையும் ஞான ஆட்சியாகும்
அருள்பட அரங்கன் வழியதும்
ஆறுமுகனார் ஞானவழி ஆகும் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

## முருகப்பெருமான் துணை

## மகான் அதிபத்தநாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :

எல்லையில்லா ஆனந்தமளிக்கும் ஞானத்தின் மகா சூட்சும சக்தியே முருகப்பெருமானின் கலியுக தவத்தின் வெளிப்பாடாக ஞானதேசிகனாக அரங்கமகா தேசிகனாக அவதரித்து இவ்வுலகினில் ஏழாம் படை வீடாய் ஞானசபைதனை ஓங்காரக்குடில் எனும் பெயரினில் அமைத்து அருள் செய்து வருகின்ற மகா ஞானியே அரங்கா உமது பெருமைகளை உலகமெலாம் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 24ம் நாள் 10.11.2018, சனிக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே அதிபத்த நாயனார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அதிபத்தநாயனார்.

குற்றமற்ற நல்லுலகமாக இக்கலியுகத்தை படைத்திட உயிர்க்கொலை தவிர்த்து புலால் மறுத்து சைவ உணவை மேற்கொள்ளும் கொல்லா நெறியாகிய சுத்த சைவநெறியே அற்புதமான வழிகாட்டல் என்றே மக்களிடம் தாயன்போடு உபதேசித்து சாத்வீக இயல்பாய் பரவி நற்குணம் பட, ஞானவகையினை விதைக்கின்ற ஆறுமுக அரங்கனே உலக மக்கள் கடைத்தேறிட முற்றுப்பெற்ற முனிவர்களான ஞானியர் திருவடி பற்றி செய்கின்ற பூஜையான ஞானபூஜை முறைகளை அருளி உலகநலன் கருதி அரங்கன் ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி தினத்தினிலே சிறப்பு ஞானபூஜைகளாக செய்து வருகின்றார்.

புண்ணியமுடன் பூஜை முறைகளைக் கூறி பக்தியையும் அருளையும் வளர்க்கின்ற மகா ஞானியே வாசியை வென்ற மகா தவசியே ஞானதேசிகனே, வள்ளல் ஞானியே அரங்கா தாம் கூறும் தூயமார்க்கமே இவ்வுலகினில் சிறந்த சன்மார்க்கமாகும்.

அரங்கா தாம் கூறும் சன்மார்க்க நெறியினை உயர்வுடன் ஏற்கும் மக்களே, வளமான வாழ்வை ஞானபலமுடன் பெற்று சிறப்படைவார்கள். வாழும் காலத்திலேயே அவர்கள் எண்ணியதெல்லாம் நிறைவேறி வெற்றி காண்பார்கள். வெற்றிகளை பெறுவதுடன் தருமசிந்தை பெருகி பலவகையிலும் ஆற்றல் பெருகி சிறப்பான வாழ்வினை வாழ்ந்திடுவார்கள்.

**ஆறுமுக அரங்கமகா தேசிகனே இந்த கலியுகத்தினை மீட்க வந்துதித்த ஞானகுரு ஆவார்.**

உயர் ஞானகுரு அரங்கனின் குருவருள் பெற்று அரங்கனைத் பின்தொடர்ந்து வருகின்ற மக்கள் திருவருளாம் தெய்வங்களின் அருளையும் பெற்று ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொண்டு பிறவா கதியினையும் பெற்று பெரும்பேற்றினை அடைவார்கள்.

எல்லையற்ற பெருமைகளைக் கொண்டிட்ட ஆறுமுக அரங்கன் செய்கின்ற தருமங்கள் பிழையின்றி தூயஞான வழிகாட்டும் தருமச் செயல்களாகும். முருகப்பெருமானின் ஆட்சியை இவ்வுலகினில் கொண்டு வருகின்ற வல்லமையும், சிறப்பையும் பெற்றிட்ட சக்தி வாய்ந்த தருமமாகும்.

அரங்கனின் தருமம் வளரவளர, கலியுகம் தானே அழிவிலிருந்து மீண்டு முருகப்பெருமானின் அருள் பலத்தைப் பெற்று மக்களை அழிவிலிருந்து காத்து வரம் அருளும் ஞானயுகமாக மாறிடும். முருகப்பெருமானின் ஆட்சியையும் கொண்டு வரும் ஞானஆட்சி நடந்திட வழிவகை செய்திடும்.

அரங்கனின் வழி அருள் வழியாகும், அரங்கனின் வழி ஆறுமுகப்பெருமானின் ஞானவழி ஆகும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் அதிபத்த நாயனார்.

–சுபம்–